# மண்ணின் சிறப்பியல்புகள்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## தேர்ச்சி மட்டம் 2.1 மண்ணின் சிறப்பியல்புகள் பற்றி விசாரணை செய்வர்

**மண்**

சேதனப்பொருட்கள், வேறுபட்ட அங்கிகள், வளி, நீர் என்பவற்றைக் கொண்ட, புவிமேற்பரப்பில் அமைந்த, தரையில் உயிரின் இருப்பில் பங்களிப்பு செய்யும் இயற்கையான, இயக்கத்தன்மையுள்ள உடல் ஆகும்.

**முக்கியத்துவம்**

- தாவர வளர்ச்சிக்கான ஊடகமாகத்தொழிற்படுதல்
- நீர் தேக்கி வைத்தல், சுத்திகரித்தல்
- போசணைக்களஞ்சியமாகத்தொழிற்படுதல்
- அங்கிகளின் வாழிடமாக அமைதல்
- வளிமண்டலத்தை மிதப்படுத்தல்

### மண்ணின் கூறுகள்

- மண் திண்மப்பதார்த்தம் 49%
- மண்வளி 25%
- மண்நீர் 25%
- மண்அங்கிகள் 1%

### மண் திண்மப்பதார்த்தம்

இவை மண் கனிப்பொருட்கள், மண் சேதனப் பொருட்கள் என இரு வகைப்படும்.

### 01. மண் கனிப்பொருட்கள்

⇒ மண் கனிப்பொருள் என்பது திட்டமான இரசாயன கட்டமைப்புடன் கூடிய சீரான அசேதன பொருளாகும். மண்

⇒ கனிப்பொருள் மணல், அடையல், களி ஆகிய முதல் துணிக்கைகளினால் ஆனது. பாறையும் தாய்ப்பாறைப் பொருளக்ளும் வானிலையால் அழிவுற்று இவை உருவாகும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 02. மண் சேதனப்பொருட்கள்

⇒ உக்கும் நிலையிலுள்ள தாவர விலங்குப்பகுதிகளும் அவற்றின் சுரப்புகளும் கலப்பதன் விளைவாக மண் சேதனப்பொருட்கள் உருவாகும்.

⇒ இங்கு வெவ்வேறு அளவில் பிரிகையடைந்த சேதனப்பொருட்களும் புதிதாக மண்ணுடன் சேர்ந்த சேதனப்பொருட்களும் அடங்கியிருக்கும்.

### மண் சேதனப்பொருட்களின் முக்கியத்துவம்

- மண்ணின் வெப்பநிலையைப் பேணல்.
- மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்தல்.
- மண் காற்றூட்டம், நீர்பற்றும்திறன, ஊடுபுகவிடுமியல்பை மேம்படுத்தல்.
- மண்ணரிப்பு குறைக்கப்படும்.
- உக்கலின் கற்றயன் பரிமாற்றக் கொள்ளளவு அதிகம் எனவே நச்சு அயன்களை இது உறிஞ்சுவதால் தாவரங்கள், மண் அங்கிகளுக்கு பாதிப்புக் குறைவு.
- உக்கல் பாரியிர் வீச்சினுள் தாங்கல் திறனைக் காட்டும் தன்மையுடையது.

### மண்வளி

மண் துணிக்கைகளுக்கு இடையில் காணப்படும் வெளிகளில் உள்ள வளி மண்வளி எனப்படும்.

மண்வளியின் முக்கியத்துவம்

- தாவரவேர் தொழிற்பாட்டுக்கு அவயசிம்
- நீர், போசணைக்கூறு அகத்துறிஞ்ச அவசியம்
- வித்து முளைக்க அவசியம்
- மண்நுண்ணங்கிகளின் இருப்பிற்கு அவசியம்

தொகுப்பு : திருமதி.சோபனா லகீதரன் - ஆசிரியர் (வட மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மண்அங்கிகள்

மண்ணை வாழ்விடமாகக் கொண்ட எந்தவொரு அங்கியும் மண் அங்கி எனப்படும். இவை 3 வகைப்படும்.

01 பேரங்கிகள் -

மண்ணில் வாழும் 2 mm இலும் கூடிய உடல் அகலத்தைக் கொண்ட அங்கிகள்.

உ-ம் : - முள்ளந்தண்டுளிகள் (எலிகள், நகருயிரகள்).

- முள்ளந்தண்டிலிகள் (வண்டுகள், எறும்புகள், மண்புழு நத்தை).

02 இடைநிலை அங்கிகள்

இவை மண்ணில் வாழும் 0.2-2 mm இடைப்பட்ட அகலத்தைக் கொண்ட அங்கிகள்.

உ-ம் : - இலைக்கன்கள், சிற்றுண்ணிகள்.

03 நுண்ணங்கிகள்

இவை மண்ணினுள் வாழும் 0.2 அஅ இலும் சிறிய உடற்பருமனுடைய அங்கிகளாகும்.

உ-ம் : - பற்றீரியாக்கள், சயனோபற்றீரியாக்கள், அல்காக்கள், பங்கசுகள், அக்ரினோமைசிற்றேசு, புரற்றோசோவாக்கள்

## மண் நீர்

மண் துணிக்கைகளிடையில் காணப்படும் நீர். இது பௌதீக ரீதியில் 03 வகைப்படும்

01 புவியீர்ப்பு நீர்

02 மயிர்த்துளை நீர்

03 பருகு நீர்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk